# வெளிநாட்டில் பணிபுரிகின்ற இலங்கையர்கள் மற்றும் பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிப் பெறுகைகளை பெற்றுக்கொள்பவர்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நாணயம் வைத்திருப்போருக்கு

# இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலிடுவதற்கான வாய்ப்பு

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

# இலங்கை அபிவிருத்தி முறிகள்

வழங்கல்

(ஐக்கிய அமெரிக்க டொலரில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகள்)

பொதுப்படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**முதலீடும் தீர்ப்பனவும் : 2022 சனவரி 25 இலிருந்து திறக்கப்படும் அத்துடன் மறுஅறிவித்தல் வரை திறக்கப்பட்டிருக்கும்**

| | | |
|---|---|---|
| நாணயம் | : | ஐக்கிய அமெரிக்க டொலர் |
| காலம் மற்றும் வட்டி வீதம் | : | தயவுசெய்து கீழே அட்டவணையைப் பார்க்க |
| வட்டிக் கொடுப்பனவுகள் | : | ஆண்டிற்கு இரு தடவை |
| முதலீட்டுத் தொகை | : | குறைந்தபட்சம் 1,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் மற்றும் 1,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களின் பெருக்கங்களிலிருந்து |
| வரி | : | இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலிடுவதற்கு பிடித்துவைத்தல் வரி இல்லை |
| வழங்கும் அலுவலகம் | : | பொதுப்படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி |
| முறிகளைக் கொள்வனவு செய்வதற்காக குறித்துரைக்கப்பட்ட முகவர்கள் | : | தெரிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் |

உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் குறித்துரைக்கப்பட்ட முகவர் ஊடாக அல்லது முதலீட்டாளர்களினால் நேரடியாக fopdd@cbsl.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிக்கப்படலாம். முதலீட்டாளர்களால் நேரடியாகச் சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் முதலீட்டு ஏற்பாடுகளுக்காக முதலீட்டாளர் விரும்புகின்ற பெயர்குறிக்கப்பட்ட முகவருக்கு விண்ணப்பம் அனுப்பப்படும்.

கொண்டுவரப்பட்ட முதலீட்டுத் தொகை மீது 50 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட ஊக்குவித்தல் அத்துடன்/ அல்லது கையாளுதல் கட்டணம் பெயர்குறிக்கப்பட்ட முகவர்களுக்கு ஊக்குவிப்பாக வழங்கப்படும். இக்கட்டணம் முதலீடுகளின் ஏற்பாட்டாளர்களுடன்[1] சேர்த்து பெயர்குறிக்கப்பட்ட முகவர்களால் பகிரப்படலாம்.

[1] இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீட்டினைக் கொண்டு வருகின்ற ஏதேனும் நிறுவனம் அல்லது தனிப்பட்டவர்.

## கிடைக்கப்பெறுகின்ற இலங்கை அபிவிருத்தி முறியின் முதிர்ச்சிகளும் முதலீட்டிற்கு ஏற்புடைய நிலையான வீதங்களும்[2]

| 2022 சனவரி 25 அன்று உள்ளவாறான எஞ்சியுள்ள முதிர்ச்சி | ஏற்புடைய நிலையான வீதம் (ஆண்டுக்கான சதவீதம்) |
|---|---|
| 6 மாதம் | 7.50 |
| 10 மாதம் | 7.65 |
| 1 வருடம் | 7.80 |
| 1 வருடம் 3 மாதம் | 7.85 |

| 2022 சனவரி 25 அன்று உள்ளவாறான எஞ்சியுள்ள முதிர்ச்சி | ஏற்புடைய நிலையான வீதம் (ஆண்டுக்கான சதவீதம்) |
|---|---|
| 2 வருடம் | 7.90 |
| 2 வருடம் 3 மாதம் | 7.90 |
| 3 வருடம் | 7.90 |

| 2022 சனவரி 25 அன்று உள்ளவாறான எஞ்சியுள்ள முதிர்ச்சி | ஏற்புடைய நிலையான வீதம் (ஆண்டுக்கான சதவீதம்) |
|---|---|
| 4 வருடம் | 7.95 |
| 4 வருடம் 6 மாதம் | 7.95 |
| 4 வருடம் 11 மாதம் | 7.95 |

[2] அடுத்த இலங்கை அபிவிருத்தி முறி ஏலத்தின் தொடக்கம் வரை மாற்றமின்றி காணப்படும். மேலே குறிப்பிட்ட இணைய இணைப்பினூடாக அணுகக்கூடிய முன்வைப்பு தகவல் ஆவணத்தில் மேலதிக விபரங்கள் கிடைக்கப்பெறுகின்றன.

## பெயர்குறிக்கப்பட்ட முகவர்கள் அட்டவணை

அக்குயிட்டி செக்குறிட்டீஸ் லிமிடெட், தொலைபேசி: 2206297 | இலங்கை வங்கி தொலைபேசி: 2448830 | கப்பிட்டல் அலையன்ஸ் லிமிடெட், தொலைபேசி: 2317777/ 2317730-1 | கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி, தொலைபேசி: 2330406 | டொயிஷ் வங்கி ஏஜி, கொழும்பு கிளை, தொலைபேசி: 2447062 | டீஎவ்சிசி வங்கி பிஎல்சி, தொலைபேசி: 2442442 | பெஸ்ட் கப்பிட்டல் ரெசறீஸ் பிஎல்சி, தொலைபேசி: 2639898 | ஹபீப் வங்கி லிமிடெட், தொலைபேசி: 2370390 | அட்டன் நசனல் வங்கி பிஎல்சி, தொலைபேசி: 2664664 | இந்தியன் வங்கி, தொலைபேசி: 2447163 | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தொலைபேசி: 5324422 | எம்சிபீ பாங் லிமிடெட், தொலைபேசி: 2448765 | நஷனல் டெவலப்மென்ட் பாங்க் பிஎல்சி, தொலைபேசி: 2448448 | நேஷன்ஸ் றஸ்ட் வங்கி பிஎல்சி, தொலைபேசி: 4711411 | என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடெட், தொலைபேசி: 2425010 | பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி, தொலைபேசி: 4667702 | மக்கள் வங்கி, தொலைபேசி: 2206783 | பப்ளிக் பாங்க் பேர்காட், தொலைபேசி: 2576289 | சம்பத் வங்கி பிஎல்சி, தொலைபேசி: 2305841-2 | செலான் வங்கி பிஎல்சி, தொலைபேசி: 2456337 | யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி, தொலைபேசி: 2374100 | வெல்த் றஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட், தொலைபேசி: 2675091-4.

## தகைமையுடைய முதலீட்டாளர்கள்

(அ) உள்முக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக அவர்களுடைய வதிவிட அந்தஸ்தினைப் பொருட்படுத்தாது வெளிநாடுகளின் பிரசைகள்

(ஆ) உள்முக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக இலங்கைக்கு வெளியில் வதிகின்ற இலங்கைப் பிரசைகள்.

(இ) தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளை, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளை அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுக் கணக்குகளை வைத்திருப்போர்.

(ஈ) உள்முக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் அல்லது இலங்கைக்கு வெளியில் பதிவுசெய்யப்பட்ட பங்குடமைகள்.

(உ) உள்முக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக இலங்கைக்கு வெளியில் நிறுவப்பட்ட நாட்டு நிதியங்கள், பிராந்திய நிதியங்கள், பரஸ்பர நிதியங்கள், கூறு நம்பிக்கைகள் மற்றும் நிறுவனசார் முதலீட்டாளர்கள்.

(ஊ) இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்.

(எ) வெளிநாட்டு நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்.

வழங்கல் பற்றிய மேலதிக தகவல்களையும் விண்ணப்பப் படிவங்களையும் தரப்பட்ட இணைய இணைப்பின் அல்லது QR குறியீட்டின் ஊடாக மூன்று மொழிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/about/sldb_direct_window_offer_information_e.pdf**

குறிப்பு: இலங்கை அபிவிருத்தி முறிகளை பெற்றுக்கொள்ளல் தொடர்பான தேவையான அறிவுறுத்தல்கள் இலங்கை மத்திய வங்கியால் அனைத்து வங்கிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. முன்வைப்பு தொடர்பான விபரங்கள் 2022 சனவரி 25ஆம் திகதியிடப்பட்ட முன்வைப்பு ஆவணத்தில் கிடைக்கப்பெறுகின்றது.